


# தெய்வத்தன்மையின் அடையாளங்கள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யோவான் 6:1–15; ஏசா 53:4–6; 1 கொரி. 5:7; யோவான் 6:26–36; யோவான் 9:1–41; 1 கொரி 1:26–29; யோவான் 11.

**மனன வசனம்:**

இயேசு கிறிஸ்து நித்தியக்குமாரன், பிதாவுக்கு சமமானவர், எதிலிருந்தும் உருவாகாதவர், சிருஷ்டிக்கப்படாதவர் என்று வேதாகமம் தெளிவாகச் சொல்லுகிறது. இயேசுதாம் சிருஷ்டிக்கப்பட்ட அனைத்தையும் சிருஷ்டித்தவர். யோவான் 1:1-3. எனவே இயேசு சதாகாலங்களிலும் இருக்கிறவர்; அவர் இல்லாத காலமென்று எதுவுமில்லை. இயேசு இந்த உலகத்திற்கு வந்து, நம் மனிதத்தன்மையைத் தரித்திருந்தாலும், அவரிடம் எப்போதுமே தெய்வத்தன்மை இருந்தது. குறிப்பிட்ட சில சமயங்களில் தம் தெய்வத்தன்மையை வெளிப்படுத்துகிற வகையில் இயேசு பேசினார், செயல்பட்டார்.

யோவான் இந்தச் சத்தியத்தின் முக்கியத்துவத்தை அறிந்திருந்ததால், இயேசுவின் அற்புதங்கள் சிலவற்றைச் சொல்லும்போது, அவரது தெய்வத்தன்மையைச் சுட்டிக்காட்ட அவற்றைப் பயன்படுத்தினார். இயேசு தம் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்தின வார்த்தைகளைப் பேசினது மட்டுமல்லாமல், தம் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்தின கிரியைகளைச் செய்து தம் வார்த்தைகளை நிரூபித்தார்.

இயேசுவினுடைய தெய்வீகத்தன்மையின் மிகப்பெரிய அடையாளங்களில் மூன்றை இந்த வாரப் பாடத்தில் பார்ப்போம். அந்தச் சம்பவம் ஒவ்வொன்றிலும், சிலர் அந்த அற்புதத்தை விசுவாசிக்கவில்லை அல்லது அதன் முக்கியத்துவத்தை உணரவில்லை. சிலர், அதைக் காரணம்காட்டி இயேசுவை விட்டு விலகினார்கள்; சிலர் அவரைக் கொல்ல சதித்திட்டம் போட்டார்கள். வேறு சிலர், இயேசுவே மேசியாவென நம்புகிற தருணமாக்கினார்கள்.

*2024, அக்டோபர் 12 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# ஐயாயிரம் பேரைப் போஷித்தல்

இயேசு 5000 பேரைப் போஷித்த சமயம் பஸ்கா பண்டிகையின் சமயமாக இருந்ததை யோவான் குறிப்பிட்டுச் சொல்லுகிறார். யோவான் 6:4,5. எகிப்தி லிருந்து இஸ்ரவேலரை விடுவித்ததை நினைவுகூருகிற வகையில் பஸ்கா கொண்டாடப்பட்டது. தலைப்பிள்ளை அடிக்கப்படாமல் இருக்க பஸ்கா ஆடு அடிக்கப்பட்டது. அந்தப் பலி நமக்காக இயேசு மரிக்கவிருந்ததைச் சுட்டிக் காட்டியது. நம் பாவங்கள் நிமித்தம் நாம் பெறத் தகுதியான தண்டனை சிலுவை யில் இயேசுவின்மீது விழுந்தது. நம் பஸ்கா ஆடாகிய இயேசு, நமக்காக அடிக் கப்பட்டார். 1கொரி 5:7.

'மீறுதலின் அக்கிரமத்தைச் சுமந்தார்; அவரது பிதாவின் முகம் மறைக்கப் பட்டது; அதனால் அவரது இருதயம் நொருங்கி, அவரது ஜீவனே போனது. பாவிகள் மீட்கப்படும்படி இந்தப் பலி ஏறெடுக்கப்பட்டது'.[1]

**யோவான் 6:1-14இல், இயேசுவுக்கும் மோசேக்கும் இடையே என்ன ஒற்றுமை களைக் காணமுடிகிறது? அதாவது, இங்கு இயேசு செய்த என்ன விஷயம், அவர்களது முன்னோர்கள் மோசேயின் ஊழியத்தின்மூலம் பெற்றுக்கொண்டதை மக்களில் நினைவுப்படுத்தியிருக்கவேண்டும்?**

---

---

இந்தச் சம்பவத்தின் பல விபரங்கள், யாத்திராகமத்திலுள்ள மோசேயின் சம்பவத்திற்கு ஒத்திருக்கின்றன. பஸ்கா பண்டிகையின் சமயமானது (யோவான் 6:4), எகிப்திலிருந்து கிடைத்த மாபெரும் விடுதலையைச் சுட்டிக்காட்டுகிறது. இயேசு மலையின்மேல் ஏறினார் (யோவான் 6:3), அங்கே மோசே சீனாய் மலை மேல் சென்றார். இயேசு பிலிப்பைச் சோதித்தார் (யோவான் 6:5,6), இஸ்ரவேலர் கள் வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டார்கள். அப்பங்களைப் பெருகச்செய்தார் (யோவான் 6:11), அங்கே மன்னா கொடுத்தார். மீதியான உணவைச் சேர்த்தார் கள் (யோவான் 6:12), அங்கே இஸ்ரவேலர்கள் மன்னாவைச் சேகரித்தார்கள். மீதியான துணிக்கைகளை பன்னிரண்டு கூடைகள் நிரப்பினார்கள் (யோவான் 6:13), இஸ்ரவேலரின் கோத்திரங்கள் பன்னிரண்டு. இயேசுவை உலகத்திற்கு வருகிறவரான தீர்க்கதரிசி என மக்கள் சொன்னார்கள் (யோவான் 6:14), மோசே தன்னைப் போல ஒரு 'தீர்க்கதரிசி' எனச் சொன்னார். உபா 18:15. இவை அனைத் தும் இயேசுவை தம் மக்களை விடுவிக்க வந்த புதிய மோசேயாகச் காட்டுகின்றன.

எனவே இயேசு அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தது மட்டு மல்லாமல், யூதர்களுக்கு விசேஷித்த அர்த்தமுடைய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்ததை யோவான் காட்டுகிறார். உண்மையில், தம்முடைய தெய்வீகத்தன்மையை அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறார்.

---

**இயேசு தேவனுடைய ஆட்டுக்குட்டி என்கிற மாபெரும் சத்தியம்பற்றி ஏசா 53:4-6, 1பேதுரு 2:24 வசனங்கள் சொல்லுவது என்ன? இந்த உண்மையில் அவரது தெய்வீகதன்மை எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கிறது, இந்தச் சத்தியம் ஏன் நாம் அறிந்துகொள்ள வேண்டியதிலேயே மிகவும் முக்கியமான சத்தியமாக இருக்கிறது?**

# 'மெய்யாகவே இவர் தீர்க்கதரிசி'

**இயேசுவின் அற்புதத்திற்கு மக்களின் எதிர்வினை என்ன, தாம் யாரென்பதுபற்றிப் போதிக்க அதை இயேசு எவ்வாறு பயன்படுத்தினார்? யோவான் 6:14,15,26–36.**

ரோமசாம்ராஜ்யத்தின் அடக்குதல்களிலிருந்து தங்களை விடுவிக்கக்கூடிய ஒரு பூலோக மேசியாவை யூதேயர்கள் எதிர்பார்த்தார்கள். போர் மூண்டால் எழுகிற இரண்டு பெரிய பிரச்சினை, படைகளுக்கு உணவளிப்பதும், காயப்பட்டோர் மற்றும் மரித்தோர் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதுமாகும். இயேசு தம் அற்புதங்ககளில், இரண்டையும் தம்மால் செய்யமுடியுமெனக் காண்பித்தார்.

ஆனால் இயேசு அதற்காக வரவில்லை; அவர் அற்புதம் செய்ததற்கான நோக்கமும் அதுவல்ல. மாறாக, 5000 பேரை அவர் போஷித்த சம்பவமானது, இயேசுவே ஜீவ அப்பம், தேவன்தாமே பரலோகத்திலிருந்து வந்தார் என்பதை எடுத்துக்காட்டுவதற்கே. 'ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக் காலும் பசியடையான்' என்று சொன்னார். யோவான் 6:35.

யோவான் சுவிசேஷத்தில் 'நானே' என்று வருகிற ஏழு அறிக்கைகளில் இது முதலாவது; பின்வரும் பயனிலைப் பகுதிகளுடன் 'நானே' எனும் வார்த்தை வருகிறது. அதாவது நானே, 'ஜீவ அப்பம்' யோவான் 6:35; 'உலகிற்கு ஒளி', யோவான் 8:12; 'வாசல்', யோவான் 10:7, 9; 'நல்ல மேய்ப்பன்', யோவான் 10:11, 14; 'உயிர்த்தெழுதலும் ஜீவனும்', யோவான் 11:25; 'வழியும் சத்தியமும் ஜீவனும்', யோவான் 14:6; 'மெய்யான திராட்சச்செடி' யோவான் 15:1,5 போன்றவை. இவை ஒவ்வொன்றும் இயேசுவைப் பற்றின ஒரு முக்கிய சத்தியத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. 'நானே' எனும் அறிக்கைகள் யாத்திராகமம் 3 ஐக் குறிப்பிடுகின்றன; அங்கு மோசேயிடம் தேவன் தம்மைப் பற்றி 'இருக்கிறேன் என்பவர்' என்று கூறினார். ஒப்பிடவும் யோவான் 8:58. இயேசுதாம் இருக்கிறேன் என்பவர். ஆனால் மக்கள் இதை கவனிக்க மறந்துவிட்டார்கள்.

'இருதயத்தில் திருப்தியடையாதவர்களாக, இயேசு பல அற்புதமான கிரியைகளைச் செய்யமுடியுமானால், "அவரால் தம் மக்கள் அனைவருக்கும் ஆரோக்கியமும் பலமும் செல்வமும் கொடுக்கமுடியாதா, அவர்களை அடக்குபவர்களிடமிருந்து விடுவிக்கமுடியாதா, அவர்களுக்கு அதிகாரத்தையும் கனத்தையும் கொடுத்து உயர்த்தமுடியாதா?" என்று கேட் டார்கள். அவர் தம்மை தேவனால் அனுப்பப்பட்டவர் என்று சொல்லியும், இஸ்ரவேலின் ராஜாவாக இருக்க மறுத்ததை புரிந்துகொள்ள முடியவில்லை. தவறாகப் புரிந்துகொண்டார்கள். தம்முடைய பணி தெய்வீக தன்மையுடையதென்பதில் அவருக்கே சந்தேகம் இருப்பதால்தான் தாம் சொல்லுகிறபடி செய்ய அவர் துணியவில்லை என்று அநேகர் நினைத்தார்கள். அவ்வாறு தங்கள் இருதயங்களில் அவநம்பிக்கைக்கு இடமளித்தார்கள்; சாத்தான் விதைத்த விதை, தவறாகப் புரிந்துகொள்தல், நோக்கம் தவறுதல் என அதற்கேற்ற விளைவை உண்டாக்கியது'.[1]

நித்திய வாழ்க்கை வரை நிலைத்திருக்கிற சத்தியத்தை அறிவதற்கு பதிலாக, பொருளாதார லாபத்தை எதிர்பார்த்தார்கள். இது, கவனமாக இல்லாவிட்டால் நாம் எல்லாருமே சந்திக்கக்கூடிய ஆபத்து.

---

**ஆவிக்குரிய விஷயங்களுக்கு மேலாக பொருளாதார விஷயங்களைத் தேடுவதில் சிக்கிவிடாமல் எவ்வாறு தப்பலாம்?**

# குருடனைக் குணமாக்குதல்: பகுதி 1

**அவனுடைய குருட்டிற்கு காரணம் என்னவென்று சீடர்கள் நினைத்தார்கள், அவர்களுடைய தவறான நம்பிக்கைகளை இயேசு எவ்வாறு சரிசெய்தார்?**

பாவத்திற்கும் நோய்க்கும் சீடர்கள் முடிச்சுப் போட்டார்கள். அத்தகைய முவுக்கு வரச்செய்கிற பல பழைய ஏற்பாட்டு வசனங்களும் உள்ளன. ஒப்பிடவும்: யாத் 20:5; 2இராஜா 5:15-27; 2இராஜா 15:5; 2நாளா 26:16-21. ஆனால் எப்போதுமே அப்படித்தான் இருக்கவேண்டுமா என்பதை யோபுவின் சம்பவம் யோசிக்க செய்திருக்கவேண்டும்.

அவர்கள் சந்தேகத்தை இயேசு போக்கினார்; பாவத்திற்கும் பாடுகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையெனச் சொல்லி, அதற்கு மேலான ஒரு நோக்கம் இருப்பதாகக் குறிப்பிட்டார். அது, அவன் குணமாகுவதன்மூலம் தேவ நாமம் மகிமைப்படுவதே. அந்தச் சம்பவத்திற்கு சிருஷ்டிப்பு சம்பவத்தோடு சில தொடர்புகள் உள்ளன; அதாவது தேவன் முதல் மனிதனை பூமியின் மண்ணினால் உருவாக்கினார். ஆதி 2:7. அதுபோல இயேசு இங்கு, அந்தப் பார்வையற்ற மனிதன் கருவிலேயே இழந்திருந்த ஒன்றை சேறுண்டாக்கி சரிசெய்தார்.

மத்தேயு, மாற்கு, லூக்கா சுவிசேஷங்களில், அற்புத சம்பவங்களில் ஒரு பொதுவான பாணி காணப்படும்: பிரச்சினையைத் தெரியப்படுத்துதல், அந்த நபரை இயேசுவிடம் கொண்டுவருதல், குணமாக்குதல், குணமாக்குதலை உணர்ந்து தேவனைத் துதித்தல்.

யோவான் 9இன் இந்தச் சம்பவதில், இந்த வரிசை யோவான் 9:7இல் முற்றுப்பெறுகிறது. ஆனால் யோவான் சுவிசேஷத்தில் பொதுவாகக் காணப்படுவது போல, இந்த அற்புத்தின் முக்கியத்துவம் விரிவான விவாதமாக மாறுகிறது; அது குணமாக்கப்பட்டவனுக்கும் மதத்தலைவர்களுக்கும் இடையே ஒரு நீண்ட உரையாடலுக்கு வழிவகுக்கிறது. இந்த விவாதமானது, இரண்டு பின்னிப் பிணைந்த மாறுபட்ட ஜோடிக் கருத்துகளைச் சுற்றி வருகிறது; அதாவது பாவம்/தேவனுடைய கிரியைகள் மற்றும் குருட்டுத்தன்மை/பார்வை.

இயேசு ஓய்வுநாளில் அந்த அற்புதத்தைச் செய்ததாக யோவான் 9:14இல் தான் ஆசிரியர் சொல்லுகிறார். வேதாகமத்தின்படியல்ல, பாரம்பரியத்தின்படி அது ஓய்வுநாளை மீறுவதாக இருந்தது. அதனால் அவர் ஓய்வுநாளை மீறினதாக பரிசேயர்கள் எண்ணினார்கள். அவர் 'ஓய்வுநாளைக் கைக்கொள்ளாததினால்' அவர் தேவனிடமிருந்து வந்தவரல்ல என்கிற முடிவுக்கு வந்தார்கள். ஆனால் ஒரு பாவியால் எவ்வாறு இத்தகைய அற்புதங்களைச் செய்யமுடியுமென மற்றவர்கள் யோசித்தார்கள். யோவான் 9:16.

அந்த விவாதம் இன்னும் முடியாத நிலையில், அங்கே கருத்து பேதம் உண்டாகிறது. இயேசு யாரென்பதில் பார்வையற்றிருந்த அந்த மனிதன் மேலும் மேலும் தெளிவாகிறான்; ஆனால் மதத்தலைவர்கள் அவரது உண்மையான அடையாளம்பற்றி மேலும் மேலும் குழப்பமாக அல்லது குருடாக மாறுகிறார்கள்.

---

**நம் நம்பிக்கைகளாலும் பாரம்பரியங்களாலும் குருடாக்கப்பட்டிருந்தால், நம் கண்களுக்கு முன்பாகவே முக்கிய சத்தியங்களைக் காணத்தவறுகிற ஆபத்துபற்றி இந்தச் சம்பவம் என்ன சொல்லுகிறது?**

# குருடனைக் குணமாக்குதல்: பகுதி 2

**தலைவர்கள் கேட்ட கேள்விகள் என்ன, குணமான குருடன் சொன்ன பதில் என்ன? யோவான் 9:17-34.**

யோவான் 9இலுள்ள இந்த நீளமான பகுதிதான், யோவான் புத்தகத்திலேயே இயேசுவை மையமாக வைத்துப் பேசப்படாத பகுதி; ஆனாலும், அவரை மையமாக வைத்தே அங்கு விவாதம் நடைபெறுகிறது. பாவத்தைக் குறிப்பிட்டு ஆரம்பிக்கிற அந்தச் சம்பவம் (யோவான் 9:2), பிறகு இயேசு ஓய்வுநாளில் குணமாக்கினதால் அவரைப் பாவியென பரிசேயர்கள் கருதியதாகத் தொடருகிறது (யோவான் 9:16,24); இறுதியாக குணமாக்கப்பட்ட அந்தக் குருடனை 'முழுவதும் பாவத்தில் பிறந்தவன்' என்று அவர்கள் திட்டுகிறார்கள். யோவான் 9:34.

இங்கு விநோதமான ஒரு தலைகீழ் மாற்றம் நிகழ்கிறது. அந்தக் குருடன் அதிகமதிகமாகக் காண ஆரம்பிக்கிறான்; இயேசு யாரென்கிற புரிதல் அதிகமாகி, அவரில் உறுதியான விசுவாசம் உருவாவதால் அது சரீரப்பிரகாரமான வளர்ச்சியல்ல, ஆவிக்குரிய பிரகாரமான வளர்ச்சி. மாறாக பரிசேயர்கள், தங்கள் புரிதலில் மேலும் மேலும் குருடாகிறார்கள்; முதலாவது, இயேசு யாரென்பதில் குழப்பம் உண்டாகிறது (யோவான் 9:16), பிறகு அவர் எங்கிருந்து வந்தாரென்பதை அறியாதிருக்கிறார்கள். யோவான் 9:29.

அதேசமயம், இந்த அற்புதத்தைச் சொல்வதன்மூலம், இயேசு யாரென்பதைக் காட்ட யோவானுக்கு வாய்ப்பு கிடைக்கிறது. யோவான் சுவிசேஷத்தில் காணப்படுகிற பல்வேறு கருத்துகள் யோவான் 9இன் அற்புதத்திலும் காணப்படுகிறது. இயேசு உலகத்தின் ஒளியென யோவான் உறுதிப்படுத்துகிறார். யோவான் 9:5; ஒப்பிடவும் யோவான் 8:12. அவருடைய புதிரான தோற்றம்பற்றியும் வருகிறது. அவர் யார், எங்கிருந்து வந்தார், அவரது ஊழியம் என்ன என்பதுபற்றி. யோவான் 9:12, 29; யோவான் 1:14. முந்தின அற்புதங்களில் மோசே பற்றிப் பேச்சு வருவதுபோலவே, இந்த அதிகாரத்திலும் வருகிறது. யோவான் 9:28, 29; ஒப்பிடவும்: யோவான் 5:45, 46; யோவான் 6:32. இறுதியாக, கூட்டத்தினர் எதிர்வினை. சிலர் ஒளியைவிட இருளை விரும்பினார்கள்; மற்றவர்கள் விசுவாசத்தோடு நடந்தார்கள். யோவான் 9:16-18, 35-41; ஒப்பிடவும்: யோவான் 1:9-16; யோவான் 3:16-21; யோவான் 6:60-71.

மதத்தலைவர்களின் ஆவிக்குரிய குருடு மிகப்பயங்கரமாக இருந்தது. குணமாக்கப்பட்ட குருடனால், 'பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானதுமுதல் கேள்விப்பட்டதில்லையே. அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே' என்று சொல்லமுடிந்தது. யோவான் 9:32,33. ஆனாலும் அத்தேசத்தின் வழிகாட்டிகளான ஆவிக்குரிய தலைவர்கள், இயேசுவை அடையாளம்கண்டு, அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்வதில் முதன்மையாக இருந்திருக்க வேண்டியவர்கள், அதைப் பார்க்க முடியவில்லை; பார்க்க விரும்பவுமில்லை. நம் இரு தயங்கள் எவ்வளவாய் நம்மை வஞ்சிக்கலாம் என்பதற்கு எவ்வளவு கடுமையான எச்சரிக்கை!

---

**யோவான் எழுதின இந்தச் சம்பவம் 1கொரி 1:26-29இல் பவுல் சொல்லுகிற விஷயத்திற்கு எவ்வாறு ஒத்திருக்கிறது, அந்த நியதி எவ்வாறு இப்போதும் பொருந்துகிறது?**

# லாசருவின் உயிர்த்தெழுதல்

சோகக்காட்சிகள் நிறைந்த அதிகாரம் யோவான் 11: பிரியமான நண்பர் ஒருவர் வியாதியாக இருப்பதாக வருத்தமான செய்தி வருகிறது (யோவான் 11:1-3); பிறகு, அவர் மரித்ததற்காக அழுகிறார்கள் (யோவான் 11:19, 31, 33); இயேசு இருந்திருந்தால் லாசரு மரித்திருக்கமாட்டான் என்று சகோதரிகள் புலம்புகிறார்கள் (யோவான் 11:21, 32); பிறகு, இயேசுதாமே அழுகிறார் (11:35).

ஆனால் லாசருவைப் பார்ப்பதற்கு இரண்டு நாட்கள் தாமதமாகத்தான் இயேசு கிளம்புகிறார். யோவான் 11:6. தாம் முன்னரே செல்லாமல் இருந்தது நல்லதென்றும் கூறுகிறார். யோவான் 11:14,15. அக்கறையில்லாமல் அவ்வாறு செய்யவில்லை; மாறாக, தேவமகிமை வெளிப்படும்படி தாமதித்தார்.

யோவான் 11:17-27க்கு வரும்போது, லாசரு மரித்து நான்கு நாட்களாகியிருந்தன. நான்கு நாட்கள் என்றால், லாசருவின் சரீரம் அழுகியிருக்கும்; அதனால்தான் மார்த்தாள், ‘ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலுநாளாயிற்றே’ என்று சொன்னாள். யோவான் 11:39. இயேசுவின் தாமதம், அந்த அற்புதத்தை மேலும் பிரமிக்கத்தக்கதாக மாற்றியது என்பதில் சந்தேகமில்லை. அழுகின பிரேதத்தை எழுப்புவது எப்படியிருக்கும்? தாம் தேவன் என்பதற்கு இதைவிட அதிகமாக என்ன ஆதாரத்தை அவர் கொடுக்கமுடியும்?

இயேசு தேவன்; அவர்தாம் உயிரையே சிருஷ்டித்தவர்; அதனால் அவர் மரணத்தின்மேல் அதிகாரம் பெற்றிருந்தார். எனவே லாசருவின் மரணத்தை தம்மைப்பற்றிய முக்கிய உண்மையை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாக பயன்படுத்தினார். ‘நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்’. யோவான் 11:25,26.

**இயேசு தம்மைப்பற்றிச் சொல்லியதை நிரூபிக்கிற வகையில் செய்தது என்ன? யோவான் 11:38-44.**

---

பார்வையற்ற குருடனுக்கு பார்வை கொடுத்து (யோவான் 9:7), தாம் உலகத்தின் ஒளியென இயேசு காண்பித்ததுபோல (யோவான் 8:12; யோவான் 9:5), இங்கே லாசருவை மரணத்திலிருந்து எழுப்பி (யோவான் 11:43,44), தாமே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறதை நிரூபிக்கிறார். யோவான் 11:25.

மற்ற அனைத்தையும்விட இந்த அற்புதம், இயேசுவை ஜீவனைக் கொடுக்கிறவர், தேவன் என்று சுட்டிக்காட்டுகிறது. இயேசு தேவனுடைய குமாரன், அவரை விசுவாசிப்பதால், அவர்மூலம் ஜீவனைப் பெறமுடியும் (யோவான் 20:30,31) என்று யோவான் சொல்லுவதற்கு பலத்த ஆதாரமாக இருக்கிறது.

ஆனாலும் இந்த அற்புதமான சம்பவத்தின் முடிவில் (யோவான் 11:45-54), அதைப் பார்த்த அநேகர் அவரில் விசுவாசம் வைத்தார்கள். யோவான் 11:45. ஆனாலும் அங்கே வருத்தகரமான ஒரு முரண்பாடும் வெளிப்படுகிறது. மரித்தவனை தம்மால் உயிரோடு கொண்டுவரமுடியும் என்பதை இயேசு காண்பித்தார்; ஆனாலும், அவரைக் கொல்லுவதன் மூலம் அவரை தடுத்து நிறுத்திவிடலாமென சிலர் நினைத்தார்களா? தேவனுடைய ஞானத்தோடும் வல்லமையோடும் ஒப்பிடும்போது மனிதன் பெலவீனன் என்பதற்கு என்ன ஓர் உதாரணம்!

# மேலும் படிக்க:

'உலகத்திற்கு ஜீவனைக் கொடுக்கிற கிறிஸ்துவின் ஜீவன் அவரது வார்த்தையில் உள்ளது. இயேசு தம் வார்த்தையால்தாம் வியாதியைக் குணமாக்கினார், பிசாசுகளைத் துரத்தினார்; தம் வார்த்தையால் கடலை அடக்கினார், மரித்தோரை எழுப்பினார்; அவரது வார்த்தை வல்லமை நிறைந்திருந்ததென மக்கள் சாட்சியிட்டார்கள். அவர் பழைய ஏற்பாட்டின் சகல தீர்க்கதரிசிகள், போதகர்கள்மூலம் பேசியதுபோலவே, தேவ வார்தையைப் பேசினார். வேதாகமம் முழுவதுமே கிறிஸ்துவின் ஒரு வெளிப்பாடு; தம்மைப் பின்பற்றுகிறவர்கள் தம் வார்த்தையில் விசுவாசம் வைக்க இரட்சகர் விரும்பினார். அவர் சரீரப்பிரகாரமாக எடுக்கப்படும்போது, அவரது வார்த்தையே வல்லமையின் ஆதாரமாகத் திகழவிருந்தது. அவர்கள் தங்கள் எஜமானைப் போல, "தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும்" பிழைக்க வேண்டியிருந்தது. மத் 4:4.

'நம் சரீரவாழ்க்கை உணவால் பாதுகாக்கப்படுவதுபோல, நம் ஆவிக்குரிய வாழ்க்கை தேவவார்த்தையால்பாதுகாக்கப்படுகிறது.ஒவ்வோர் ஆத்துமாவும்தேவவார்த்தையிலிருந்து தனக்கு ஜீவனைப் பெறவேண்டும். போஷாக்கைப் பெறுவதற்கு நாம் சாப்பிடுவதுபோல, வார்த்தையை நாம் உட்கொள்ளவேண்டும். பிறர் எண்ணத்தின் வாயிலாக மட்டும் அதைப் பெறக்கூடாது. நாம் கவனமாக வேதாகமத்தை ஆராய்ந்து, அவரது வார்த்தையைப் புரிந்துகொள்ளும்படி பரிசுத்த ஆவியானவரின் உதவிக்காக தேவனிடம் கேட்க வேண்டும்'[1]

[1] Ellen G. White, The Desire of Ages, p. 390.

## கலந்துரையாடக் கேள்விகள்

1 *இயேசு 5000 பேரைப் போஷித்ததையும், பிறவிக்குருடன் ஒருவனைக் குணமாக்கினதையும், மரணத்திலிருந்து லாசருவை உயிரோடு எழுப்பினதையும் இந்த வாரம் பார்த்தோம். ஒவ்வொரு சம்பவத்திலும், இயேசு தம் தெய்வீக தன்மை குறித்து வல்லமையான ஆதாரத்தை வெளிப்படுத்தினார். ஆனாலும் இந்த அற்புதங்கள், எவ்வளவு ஆச்சரியமானவையோ அந்த அளவுக்கு கருத்து பேதத்தையும் உருவாக்கின. சிலர் விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டார்கள்; மற்றவர்கள் சந்தேகித்தார்கள். வல்லமையான ஆதாரம் இருந்தாலும், மக்கள் தேவனைப் புறக்கணிக்க வாய்ப்பிருப்பது பற்றி இது காட்டுவது என்ன?*

2 *இந்தச் சம்பவங்கள் எல்லாமே கிறிஸ்துவை தேவனுடைய தெய்வீக குமாரனென சுட்டிக்காட்டுகின்றன. இயேசுவை இரட்சகராக விசுவாசிப்பதற்கு அவரது தெய்வீக தன்மையை நம்பவேண்டியது ஏன் முக்கியம்?*

3 *1கொரி 1:26-29ஐ மீண்டும் வாசியுங்கள். இருபத்தோராம் நூற்றாண்டிலும் இதே நியதி செயல்படுவதை எவ்வாறெல்லாம் பார்க்கமுடிகிறது? 'மாம்சத்தின்படி ஞானிகள்' பரியாசம்செய்து, புறக்கணிக்கிற என்ன சில 'பைத்தியமான' விஷயங்களை கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள்? 'பலமுள்ளவைகளை' 'வெட்கப்படுத்தும்படி' நம்மிடமுள்ள நம்பிக்கை என்ன?*

# கிராமப்புற கொலம்பியாவில் எழுப்புதல்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

பேப்லோவுக்கு செவந்த்–டே அட்வென்டிஸ்டுகள் பற்றித் தெரியாது. அவர் அங்குள்ள ஸிகுவானி பழங்குடியினரில் ஒரு தலைவராக இருந்தார். அவர் தூர இடத்தில் இருந்த சமயத்தில், ஓர் ஓய்வுநாள் ஆராதனையில் கலந்துகொள்ள ஒருவர் அழைத்தார்.

“இந்தச் சனிக்கிழமையில் ஒரு கூட்டம் இருக்கிறது, நீங்கள் வரவேண்டும்” என்றார்.

பேப்லோ காலை ஆராதனைக்குச் சென்றார். மதிய ஆராதனையில் வேதாகம கேள்விகள் கேட்டு மக்கள் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தை நடத்தின 25 வயதான கிறிஸ்டியன் கேமிலோ எனும் ஊழியர், ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளித்தார்.

பேப்லோவும், “நான் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் கிறிஸ்தவனாவதற்கு என்ன செய்யவேண்டும்?” என்று கேள்வி கேட்டார்.

“வேதாகம ஆராய்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும்” என்று கிறிஸ்டியன் சொன்னார்.

பேப்லோவின் ஸிகுவானி மொழியிலேயே அச்சிடப்பட்ட 20 பாடங்களைக் கொடுத்தார். பேப்லோவுக்கு அது பிடித்திருந்தது; தன் குடும்பத்தினருக்கும் அந்தப் பாடங்கள் வேண்டுமென்றார்.

கிறிஸ்டியன் ஒரு வேதாகமத்தைக் கொடுத்துவிட்டு, பாடப்புத்தகங்களுடன் அவர்களுடைய இடத்திற்கு வருவதாக பேப்லோவிடம் சொன்னார்.

கிறிஸ்டியன் பல இடங்களைச் சந்திக்க வேண்டியிருந்ததால், மூன்று மாதங்கள் கழித்துதான் பேப்லோவின் இடத்திற்குச் செல்லமுடிந்தது. அதுவும் ஸிகுவானி இனத்தைச் சேர்ந்த இரண்டு அட்வென்டிஸ்டுகளின் உதவி அவருக்குத் தேவைப்பட்டது.

கிறிஸ்டியனை வரவேற்ற பேப்லோ, அந்த 20 பாடங்களையும் தான் படித்துவிட்டதாகச் சொன்னார். தன் குடும்பத்தினருக்கும், தன் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும், வேதபாடம் நடத்தியதாகவும், 15 பேர் ஞானஸ்நானம் பெற ஆயத்தமாக இருப்பதாகவும் சொன்னார்.

வெள்ளிக்கிழமைதான் பேப்லோ அங்கு சென்றிருந்தார்; எனவே அன்று முழுவதும் அங்கிருந்தவர்களிடம் கேள்விகள் கேட்டு, அவர்கள் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாகிவிட்டார்களா என்று சோதித்தார். சூரியன் மறைந்தபோது, அங்கே ஒரு ஆராதனை நடத்தினார்.

ஓய்வுநாள் காலையில், அந்த மக்களுக்கு தெய்வீக ஆராதனை நடத்தினார். பிறகு ஒருவர், “அங்கே ஒரு குளம் இருக்கிறது, அதில் ஞானஸ்நானம் கொடுங்கள்” என்று கேட்டார். அந்த ஓய்வுநாளில் ஐந்து பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். அதில், பேப்லோவும், அவரது தாயும், இரண்டு சகோதரர்களும், சகோதரருடைய மனைவி ஒருவரும் அடங்குவர்.



இன்று பேப்லோ தன் மக்களுக்கு வேதபாடம் நடத்திவருகிறார்.

“பேப்லோவின் சமூகத்தாரில் அநேகர் தேவ வார்த்தையைக் கேட்க ஆர்வமாக இருக்கிறார்கள். அவர்களை ஆதாயப்படுத்த வேண்டும்” என்று கிறிஸ்டியன் சொன்னார்.